# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 30 /2019

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பையா | Father's/Husband's Name : கணபதி | |
| Village | : சித்தார்பட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 75 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** எந்த சொத்துக்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சுப்புராஜ் மகன் ராமராஜ் இடம் வாங்கிய சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். நானும் ராமராஜும் சித்தார்பட்டியை சேர்ந்தவர்கள். ராமராஜிடம் எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் இடம் வாங்கினேன் என்று கேட்டால் சர்வே எண். 9/1ல் ஒரு ஏக்கர் 4 செண்ட் வாங்கினேன். சர்வே எண்.9/1ல் மொத்தம் எவ்வளவு விஸ்தீரண இடம் என்று கேட்டால் 1 ஏக்கர் 98 செண்ட் நிலம் உள்ளது. மேற்படி 1 ஏக்கர் 98 செண்ட் நிலத்திற்கு வடக்கே யார் நிலம் உள்ளது என்று கேட்டால் வேலாண்டிநாயக்கரின் இடம் உள்ளது. கிழக்கு பக்கம் ஓடை உள்ளது. தெற்கு பக்கம் தாதிநாயக்கர் இடம் உள்ளது. மேற்கே நாகையசாமி இடம் உள்ளது.

2) நான் ராமராஜிடமிருந்து கடந்த 11.06.1986 ஆம் ஆண்டு மேற்படி சர்வே எண்ணில் கட்டுப்பட்ட ஒரு ஏக்கர் 4 செண்டு நிலத்தை கிரையம் வாங்கினேன் நான் கிரையம் வாங்கிய நிலத்திற்கான நான்கு மால் மேற்கே நாகை சாமியிடம் உள்ளது. வடக்கு வேலாண்டி நாயக்கர் இடம் உள்ளது. தெற்கு பக்கம் தாதி நாயக்கர் இடம் உள்ளது. கிழக்கு ஓடை. சர்வே எண்.9/1ல் கட்டுப்பட்ட மொத்த இடத்திற்கான நான்கு மாலும், நான் வாங்கிய 1 ஏக்கர் 4 செண்டின் நான்கு மாலும் ஒரே நான்கு மால் தானா என்று கேட்டால் ஆமாம், ஒரே நான்கு மால்தான் என்றால் சரிதான். சாட்சியிடம் வா.சா.ஆ.1 ஆவணத்தை காட்டி இதுதான் நீங்கள் கிரையம் வாங்கிய பத்திரமா என்று கேட்டால் சாட்சி இல்லை என்று பதில் அளித்தார். நான் கிரையம் வாங்கிய பத்திரத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்று கேட்டால் தாக்கல் செய்திருக்கிறேன்.

3) நான் நீதிமன்றத்தில் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதாகச் சொல்லும் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று கேட்டால் எனக்கு கிரையம் கொடுத்த வாதியனின் தகப்பனார் சுப்பாநாயக்கருக்கு பாத்தியப்பட்டிருந்தது. எனது வழக்குரையில் தாவா சொத்து ஆதியில் ராமராஜுக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் அனுபவத்திலிருந்து நான் கிரையம் வாங்கிய சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கும் நான் கிரையம் வாங்கிய ராமராஜுக்கும் உள்ள உறவு முறை பற்றி எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் நான் வழக்கறிஞரிடம் சொன்னேன் அவர்கள் எழுதவில்லை என்றால் நான் என்ன செய்ய முடியும் என்று சாட்சி பதில் அளித்தார்.

4) பிரதிவாதிகளுக்கும் நான் கிரையம் வாங்கிய ராமராஜுக்கும் உள்ள உறவு முறை பற்றி எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் நான் வழக்கறிஞரிடம் சொன்னேன் அவர்கள் எழுதவில்லை என்றால் நான் என்ன செய்ய முடியும் என்று சாட்சி பதில் அளித்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தின் சொத்து விபரத்தில் தெப்பம்பட்டி கிராமம் சர்வே எண்.9/1 ஏக்கர் 4 சென்ட் 16ல் நடு மையம் ஏக்கர் 1 சென்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின்படி புல எண்.9/1ல் கட்டுப்பட்ட 4 ஏக்கர் 16 சென்டுக்கு நான்கு மால் வடக்கு பக்கம் – வேலாண்டி நாயக்கர் இடம், தெற்கு பக்கம் – தாதி நாயக்கர் இடம், கிழக்கு பக்கம் – ஓடை, மேற்கு பக்கம் – நாகை சாமி இடம் ஆகும்.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2வது லக்க சொத்தாக தெப்பம்பட்டி கிராமம் சர்வே எண்.9/2ல் ஏக்கர் 2 சென்ட் 13ல் நடு மையம் 42 ½ சென்ட் நிலத்தை தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை தான் தாவா 2வது லக்க சொத்தாக எனது வழக்குரையில் காட்டினேன் என்றால் சரிதான். மேற்படி 2வது லக்க சொத்திற்கான நான்கு மால் வடக்கு – வேலாண்டி நிலம், மேற்கே – நாகையசாமி நிலம், தெற்கு – தாதி நாயக்கர் இடம், கிழக்கு – ஓடை. வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள 1, 2 இலக்க சொத்துக்களில் குறிப்பிட்டுள்ள நான்கு மாலில் கட்டுப்பட்ட நிலம் ஸ்தலத்தில் இல்லை என்று சொன்னால் ராமராஜ் எனக்கு மோசடியாக பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார்.ராமராஜ் எனக்கு மோசடியாக பத்திரம் எழுதி பதிவு செய்து

கொடுத்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்று கேட்டால் 2017 ஆம் ஆண்டில் தான் தெரிய வந்தது. அதன் பிறகு ராமராஜை சந்தித்து எதுவும் கேட்டேனா என்றால் அப்போது அவர் இறந்து விட்டார்.

6) ராம்ராஜ் உயிருடன் இல்லை என்பதால் வேறு நபர்களிடம் இந்த ஆவணம் பற்றி கேட்டேனா என்றால் அவர் வீட்டிற்கு சென்றேன், அவரது மனைவி மட்டும் இருந்தார், மகன்கள் இல்லை நான் திரும்பி வந்து விட்டேன். ராமராஜ் என்னை மோசடி செய்து விட்டார் என்பதற்கு வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் எனக்கு விபரம் தெரிந்த 1 மாதத்திற்குள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக் கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு 2017 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்து விட்டேன் என்று சொன்னால் அதன் பிறகு எவ்வளவு நாட்களில் நான்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்று கேட்டால் 2017 ம் ஆண்டிலேயே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன்.

7) வா.சா.ஆ.2, 3 வில்லங்கச் சான்று நான் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரம் எதற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்று கேட்டால் ராமராஜன் மகன்கள் மூன்று பேரும் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள், அதனால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேன். வா.சா.ஆ. 4 ஆவணத்தை நான் படித்து பார்த்திருக்கிறேனா என்று கேட்டால் படித்திருக்கிறேன் தற்போது ஞாபகம் இல்லை. என்னிடம் வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தை கொடுத்து அந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களும், நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்துக்களின் விபரத்தையும் ஒப்பிட்டு பார்த்து சொல்ல முடியுமா என்று கேட்டால் அது மோசடி ஆவணம் அந்த ஆவணத்தை படிக்க நான் தயாராக இல்லை என்று சாட்சி பதில் அளித்தார்.

8) வா.சா.ஆ.1, 4 பாகவித்தி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களுக்கும், நான் ராமராஜியிடம் இருந்து வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்றதாகச் சொல்லும் சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 மோசடி கிரையம் பத்திரத்தை வைத்துக்கொண்டு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற

எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருந்த வழக்கில் பிரதிவாதிகள் தாவா சொத்து அவர்கள் அனுபவத்தில் இருப்பதால் நான் அவர்களுக்கு எந்த இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரமும், விளம்புகை பரிகாரமும் கோரி எதிர் கோருரிமை மனு தாக்கல் செய்துள்ள விபரங்களுக்கு தெரியுமா என்று கேட்டால் என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) நான் கிரையம் வாங்கிய சொத்துக்கள் பொறுத்து உட்பிரிவு செய்யப்பட்டு எனது பெயரில் பட்டா உள்ளதா என்று கேட்டால் தனிப்பட்டா இருக்கிறது. நான் ராமராஜிடம் கிரையம் வாங்கிய 2 லக்க சொத்துகளும் ஒட்டி உள்ளதா அல்லது தனித்தனியாக உள்ளதா என்றால் ஒட்டி ஒரே தாராக உள்ளது. நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் சொத்து, மொத்தவிஸ்தீரணமான 1 ஏக்கர் 98ல் 1 ஏக்கர் 4 செண்ட் மற்றும் 42 ½ செண்ட் ஆக மொத்தம் 1 ஏக்கர் 46 ½ செண்ட் நிலம் நான் கிரையம் வாங்கி 40 ஆண்டுகளாக அனுபவம் செய்து வருகிறேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில்கோருரிமை மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பதில் உரையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் மேற்படி பதிலுரையிலாவது எனக்கு கிரையம் கொடுத்த ராமராஜின் மக்கள் தான் இந்த பிரதிவாதிகள் என்ற விபரத்தை சொல்லவில்லை.

10) என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் சர்வே எண்.9/1 மற்றும் 9/2ற்கானது தான். இதில் கட்டுப்பட்ட நிலங்களை தான் நான் கிரையம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த புலப்படம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புலப்படத்தில் எந்த உட்பிரிவில் கட்டுப்பட்ட நிலத்தை நான் கிரையம் வாங்கினேன் என்று கேட்டால் சர்வே எண்.9/1A, 9/1Bல் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணத்தையும் நான் கிரையம் வாங்கினேன். மேற்படி சர்வே எண்.9/1A, 9/1Bக்கு தெற்கு மாலாக காட்டப்பட்டுள்ள சர்வே எண்.9/2Bல் கட்டுப்பட்டநிலம் ய ாருக்கு பாத்தியப்பட்டதுஎன்று கேட்டால் செல்லக்கண்ணு, செல்வம், தங்கையா ஆகியோருக்கு பாத்தியப்பட்டது. சர்வே எண்.9/1A, 9/1B நிலங்களுக்கு வடக்கு பக்கம் – வேலாண்டி நாயகருக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது. சர்வே எண்.9/1A, 9/1B நிலங்களுக்கு கிழக்கு பக்கம் – புல எண்.10ல் உள்ள ஓடை இருக்கிறது.

11) சர்வே எண்.9/1A, 9/1B நிலங்களுக்கு மேற்கு பக்கம் – புல எண்.6 ல் உள்ள நாகையசாமி இடம் உள்ளது. சர்வே எண்.9/1A, 9/1B நிலங்களுக்கும் நான் ராமராஜூடம் கிரையம் வாங்கிய சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை நானாக மோசடி செய்து உற்பத்தி செய்து கொண்டு தாவா சொத்து சம்பந்தமாக விளம்புகை பரிகாரம் எதுவும் கோராமல் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்குரையில் 5 வது பத்தியில் தாவா சொத்துக்கள் குறித்து பிரதிவாதிகள் கடந்த 13.11.2017 ஆம் தேதி பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

12) மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் பிரதிவாதிகள் உரிமை கோரி வருவதால் அந்த பத்திரம் சம்பந்தமாக விளம்புகை பரிகாரம் கோராமல் நான் தாக்கல் செய்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிராது சொத்தில் பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதால் அவர்கள் அதில் எனக்கு இடைஞ்சல் செய்வதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் எனக்கு பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்தார்கள் என்று கேட்டால் நான் பிரதிவாதிகள் வீட்டிற்கு சென்று மோசடி ஆவணம் பற்றி கேட்க பிரதிவாதிகள் வீட்டிற்கு சென்று வந்ததிலிருந்து 1 மாதம் கழித்து அவர்கள் எனக்கு இடைஞ்சல் செய்தார்கள். சர்வே எண்.9 ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் பிரதிவாதிகள் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் அது வருவாய் மோசடி செய்து பெறப்பட்டது மோசடியான ஆவணங்களை வைத்து பொய்யான சங்கதிகளை கூறி நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 09.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2025.10.09 18:19:33 +0530

District Munsif,
Aundipatti.